Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU

போன்: 369 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற் பெட்டி எண்: 49

மலர் 3 யாழ்ப்பாணம், பிலவ சித்திரை 24-ஆம் நாள் துல்கஃதா 20 (6-5-61) சனிக்கிழமை இதழ் 70

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!
இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை
உபயோகியுங்கள்.
தயாரிப்பாளர்கள்:
S. V. முருகேசன் அன் சன்ஸ்
பெங்களூர்–2.

# தோட்டத்தில் 140 பேர்

## வேலை நிறுத்தம்

## மட்டக்களப்பில் 549 துப்பாக்கிகள் ஒப்படைப்பு

கொழும்பு, சனி

- அக்கரப்பத்தனையைச் சேர்ந்த டொரிங்டன் தோட்டத்தில் 140 தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கிறார்கள்.
- மட்டக்களப்பில் 549 துப்பாக்கிகள் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.
- ஊரடங்குச் சட்ட நேரம் குறைக்கப்பட்டிருப்பது பற்றி அவ்வப்பகுதிகளிலுள்ள மக்கள் திருப்தி தெரிவித்திருக்கிறார்கள்.

மேற்கண்ட விபரங்கள், நேற்று பாதுகாப்பு - வெளிவிவகார அமைச்சின் பாராளுமன்றக்காரியதரிசி திரு.பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா விடுத்துள்ள அறிக்கையில் காணப்படுகின்றது. அறிக்கையில் கூறுவதாவது:-

"வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அரசாங்க காரியாலயங்கள் வழக்கம் போல் நடைபெற்று வருகின்றன. உத்தியோகஸ்தர்கள் அனைவரும் வேலைக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஊரடங்குச்சட்ட நேரத்தில், மாலை 7 மணி முதல் காலை 5 மணி வரை மாற்றம் ஏற்படுத்தியிருப்பது பற்றி அப்பகுதிகளிலுள்ள மக்கள் திருப்தி அடைந்திருக்கிறார்கள். எவ்வித அசம்பாவிதமும் நிகழவில்லை.

### மந்திரி விஜயம்

ஸ்தலஸ்தாபன வீடமைப்பு மந்திரி திரு. மகாநம சமரவீர, நிலைமையை அறிந்து வரும் பொருட்டு நேற்று யாழ்ப்பாணம் சென்றிருந்தார்.

மட்டக்களப்பில் 549 துப்பாக்கிகள் திரும்ப ஒப்படைக்கப்பட்டன. ராணுவ ரோந்து வழக்கம்போல் நடைபெற்று வருகிறது.

### தோட்டத்தில்

அக்கரப்பத்தனையைச் சேர்ந்த டொரிங்டன் தோட்டத்தில் 140 தொழிலாளர்கள் வேலைநிறுத்தம் செய்திருக்கின்றனர். இவர்கள் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசைச் சேர்ந்தவர்கள்.

## அமெரிக்கச் சஞ்சிகைகள் தடை

ஜாகர்த்தா, மே 5

"டைம்," "லைப்" என்ற இரு அமெரிக்கச் சஞ்சிகைகளை இந்தோனேஷிய அரசாங்கம் மறு அறிவிப்புவரை தடைசெய்திருக்கிறது. ஜனாதிபதி சுகர்ணோவைக் கண்டித்து இவைகள் எழுதியிருந்ததே தடைக்குக் காரணம்.

## சமஷ்டிக் கட்சி கோரிக்கை

### இந்திய எம். பி.க்கள் ஆலோசனை

புதுடில்லி, புதன்

தமிழையும் இலங்கையின் உத்தியோக மொழிகளில் ஒன்றாக்க வேண்டுமெனக் கோரி சமஷ்டிக் கட்சியினர் ஆரம்பித்த கிளர்ச்சி பற்றி காங்கிரஸ் பார்லிமெண்டரிக் குழுவின் கூட்டத்தில் ஆராயப்பட்டது. இக் கூட்டத்தில் இந்திய யூனியன் தபால்துறை அமைச்சர் டாக்டர் பி. சுப்பராயனும் கலந்து கொண்டார்.

## அமெரிக்கவானவெளிமனிதர் பூமிக்கு மீண்டார்

### "ஆஹா, என்ன ரம்மியமான காட்சி" என வருணிப்பு

கேப்கார்னிவல், மே 5

அமெரிக்க வானவெளிப் பிரயாணி அலன் ஷெப்பர்ட் இன்று, 1 டன் நிறையுள்ள ராக்கெட்டில் 115 மைல் வான வெளி சென்று பத்திரமாய் பூமிக்குத் திரும்பினார். முதலில் மணிக்கு 1000 மைல் வேகத்திலும், ஆறரை நிமிஷத்திற்குப்பின், 4000 மைல் வேகத்திலும் சென்ற ராக்கெட்டிலிருந்து அவரது முதலாவது செய்தி பூமிக்கு எட்டியது. மேலிருந்து பூமியைக் கண்ணுற்ற அவர் "ஆஹா, என்ன ரம்மியமான காட்சியாய் இருக்கிறது" என்றார். சகல கருவிகளும் ஒழுங்காய் இயங்கிய நிலையில் ஷெப்பர்ட் அட்லாண்டிக்கில் இறங்கினார். அவரை ஏந்துவதற்காக அட்லாண்டிக் சமுத்திரத்தில் சுமார் 300 மைல்பரப்பில் கப்பல்களும், விமானங்களும் நிறுத்தப்பட்டிருந்தன.

## தமிழ் ஒலிபரப்பில் தணிக்கை

கொழும்பு, மே 5

இலங்கை வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளைத் தணிக்கை செய்ய தகுதிவாய்ந்த அதிகாரி ஒருவரை அரசாங்கம் நியமித்துள்ளது.

தகுதிவாய்ந்த அதிகாரியிடம் தமிழ் ஒலிபரப்பில் ஒலிபரப்பாகும் இசைத் தட்டுகளை கண்காணிக்கும்படியும் அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்தஉத்தியோகஸ்தர் இந்த நிகழ்ச்சிகளைக் கேட்டு அது பற்றி அரசாங்கத்துக்கு ஒரு அறிக்கை சமர்ப்பிப்பார்.

## 'சுவீப்' பெயர் மாறும்

கொழும்பு, வெள்ளி

தேசிய ஆஸ்பத்திரி லொத்தர் சுவீப் என்ற பெயர் விரைவில் 'சுகாதார சேமநல சுவீப்' என்று மாற்றம் பெறும். சுகாதார மந்திரி ஏ. பி. ஜயசூரியாவும் கைத்தொழில் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்காவும் கலந்து கொண்ட ஒரு மகாநாட்டில் இந்தப் பெயர் மாற்றம்பற்றி முடிவு செய்யப்பட்டது.

சுகாதாரத்துக்கும் மற்றும் சமூக சேம நல அலுவல்களுக்கும் இந்நிதியை உபயோகிக்க இனி அனுமதி கிடைக்கும்.

## மற்றொரு கல்லூரி வித்தியாதிபதியின் கீழ் சேர்க்கப்படும்

கொழும்பு, வெள்ளி

கட்டணம் வசூலிக்காமல் தனித்தியங்குவதென்று தீர்மானித்த கண்டி செண்ட் சில்வெஸ்டர் கல்லூரியும் விரைவில் வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப் படவிருக்கிறது.

தனித்தியங்குவதென்று இருக்க முடிவு செய்யப்பட்ட பின் கல்லூரியிலிருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்களைத் திருப்பி எடுக்க கல்லூரி முகாமையாளர் மறுத்ததுதான் இக் கல்லூரியை வித்தியாதிபதியின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதென்று கல்வி அமைச்சு இப்பொழுது முடிவு செய்திருப்பதற்குக் காரணம்.

## யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் யார்?

### 'நான்' என்கிறார் சண்முகம்; 'நான் தான்' - சின்னையா

### மந்திரி சமரவீரா வந்து திரும்பினார்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளர் யார்?

"நான்" என்கிறார் திரு. கே. சண்முகம். "நான்தான் ஆணையாளர்" என்கிறார் திரு. சின்னையா.

மாநகரசபைக் கட்டடத்தில் நகரசபை ஆணையாளரின் காரியாலயத்தின் கதவு இப்பொழுது பூட்டப்பட்டிருக்கிறது.

காரியாலயக் கதவைப் பூட்டி சாவியை எடுத்துக்கொண்டு திரு. சண்முகம் கொழும்புக்குப் போய்விட்டார்.

மாநகரசபையின் கணக்கு மதிப்பீடு காரியாலயத்தில் திரு. சின்னையா உட்கார்ந்து தனது வேலைகளைக் கவனித்து வருகிறார்.

நுவரேலியா மாநகரசபையில் ஆணையாளராகக் கடமையாற்றிய திரு. சண்முகம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கும் திரு. சின்னையா நுவரேலியாவுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்ததாகஅறிவிக்கப்பட்டிருந்தது.

ஏப்ரல் மாதம்முதலாந்திகதி திரு. சண்முகம் யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு பதவியேற்க வந்திருந்தார். இங்கு இடமாற்றம் சம்பந்தமாக திரு. சின்னையாவுக்கு உத்தரவு வரவில்லையென அறிவிக்கப்பட்டது. திரு. சண்முகம் மீண்டும் நுவரேலியாவுக்குச் சென்றார்.

மீண்டும் கிடைத்த உத்தரவின்பேரில் திரு. சண்முகம் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளராகப் பதவியேற்க சென்ற மாதம் 24-ந் திகதி இங்குவந்து சேர்ந்தார். தனக்கு இடமாற்ற உத்தரவு வந்துள்ளதென்றும், ஆனல் வருட

(5ம் பக்கம் பார்க்க)

## மன்னாரில் சிறுபோகம்

மன்னார், மே 5

மன்னார் மாவட்டத்தில் காலபோகம் நல்ல விளைச்சலைக் கொடுத்துள்ளது. சிறுபோகத்தை ஆரம்பிப்பதற்காக அரசினர் நிலத்திற் கொடுக்கப்பட்ட ஐந்திலொரு பங்குப் புலவுகளை மக்கள் பெற்று விதைக்கத் தொடங்கியுள்ளார்கள்.

## அகிலமெங்கும் தாகூர் நூற்றாண்டு விழா கொண்டாட்டம்

### இலங்கைவானொலியில் பலவிசேஷ நிகழ்ச்சிகள்

டோக்கியோ, மே 5

புலவரும், தத்துவஞானியும், நாடகாசிரியருமான மேதையுமான ரவீந்திரரின் நூற்றாண்டுவிழாவை ஜப்பானிலும், ரஷ்யாவிலும் விரிவாகக் கொண்டாட ஏற்பாடு நடைபெற்றுவருகின்றன. டோக்கியோ, ஹிரோஷிமா, ஓஸாகா ஆகியவை உட்பட பல ஜப்பானிய நகரங்களில் இவ்விழா 3 வாரங்கள் கொண்டாடப்படும்.

ரஷ்யாவில் மாஸ்கோவிலும், இதரநகரங்களிலும் தாகூர் நூற்றாண்டு சிறப்பாகக்கொண்டாடப்படும். மாஸ்கோவில் தாகூரின் சிருஷ்டிகள் 12 நூல்களாக வெளியிடப்படும். இதர சோவியத் நகரங்களிலும் அவரது நூல்கள் வெளியிடப்படும்.

### லண்டனில்

வருகிற 8-ம் திகதி அல்பர்ட் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் தாகூர் நூற்றாண்டுக் கொண்டாட்டத்தில் கலந்து

(8-ம் பக்கம் பார்க்க)

## பெட்ரோலியம் மசோதா 3ம் முறை நிறைவேறியது

கொழும்பு, சனி

இலங்கை பெட்ரோலியம் மசோதா நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் 3ம் முறையாக நிறைவேற்றப்பட்டது. அதற்கு முன் கமிட்டி நிலையில் ஷரத்து ஷரத்தாக மசோதா விவாதிக்கப்பட்டது. இனி குறித்த மசோதா செனட் சபைக்குப் போகும்.

காணி, விவசாய மந்திரி திரு. ஸி. பி.டி' சில்வா நேற்று ஜனப்பிரதிநிதிகள் சபையில் விவசாய உற்பத்திப் பொருள் மசோதாவை 2ம் முறையாகச் சமர்ப்பித்தார்.

## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தர வாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய் வுக்கு 10 நாள் மருந்து ரூ. 10-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்களடங் கிய கற்றலோக் (Catalogue) இனம்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி.
Advt. 91 யாழ்ப்பாணம்.



## புற்று நோய் (Cancer) மாறுதற்கு

"யோகீஸ்வர ரசம்" உபயோகியுங்கள்.

புற்று நோயை வேரறுக்கும் அரியஆயுள் வேத மருந்து. பல்லாண்டுகளாக செயல் மூலம் நிரூபிக்கப்பட்டது. இந்நோயால் பீடிக்கப்பட் டோர் நேரில் வந்து கலந்து ஆலோசிக்கவும்.

**பொ. செல்லையா**
ஆயுள் வேத வைத்தியர்
Advt. 110 கந்தர்மடம்.



## அறிவித்தல்

காரைநகர் வலந்தலைச் சந்தியில் இருக்கும் எனது கடையை இரத்தினசபா பதிக்கு கொடுத்துள்ளேன். மறு அறிவித்தல் வரை அவ ரோடு கொடுக்கல் வாங்கல் செய்வோருக்கு நான் பொறுப்பாளிஅல்ல. வாடிக் கையாளர்களே! ஜெயகுமார் கபே, மேற்கு ரோட், பலரி செய்யும். 'ஈழநாடும்' அங்கு பெற்றுக்கொள்ளலாம்.

**K. சரவணமுத்து**



## விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கன்னை திட்டி வீதியில் 31-ம் இலக்க வளவு, வீட்டுடன் விற்பனைக் கிருக்கிறது.

விபரங்கட்கு:

**க. ஐயாத்துரை**
45, கச்சேரி நல்லூர் வீதி,
(சுண்டிக்குளி)
யாழ்ப்பாணம்.


இந்திய உணவு அதிகாரி கர்னல் பட்டாச்சார்ஜி, பாகிஸ்தானில் உளவறிந்ததாய் இராணுவக் கோட்டில் விசாரிக்கப்படுவாரென, கிழக்குப்பாகிஸ்தான் அறிவித்தது.

# தென் வியட்நாமுக்கு இராணுவ உதவி அதிகரிப்பு

## அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், மே 5

தென் வியட்நாமுக்கு அமெரிக்கா அளித்து வரும் இராணுவ உதவி மேலும் அதிகரிக்கப்படவிருக்கிறது.

தென் வியட்நாமில் அதிகரித்துவரும் கம்யூனிஸ்ட் ஆபத்தையும், பயங்கரவாதத்தையும் நாசவேலைகளையும் எதிர்த்து நாட்டைக் காப்பாற்றுவதற்காகவே தென் வியட்நாம் குடியரசுக்கு அமெரிக்கா தனது இராணுவ உதவியை அதிகரிக்கத் தீர்மானித்துள்ளதாக அமெரிக்க ராஜாங்க மந்திரி திரு. டீன்றஸ்க் தெரிவித்தார்.

தென் வியட்நாமுக்கு இராணுவ உதவி அதிகரிப்பதற்கு ஜனாதிபதி கென்னடி அங்கீகாரமளித்துவிட்டாரென்றும் திரு. டீன்றஸ்க் கூறினர்.

தென் வியட்நாமில் குழப்பம் ஏற்படுவதற்கு தென் வியட்நாம் அரசாங்கத்தின் நிர்வாக ஊழல்தான் காரணம் என்று கூறப்படுவது பற்றி பத்திரிகை நிருபர்கள் கேட்டதற்கு திரு டீன்றஸ்க் பதிலளிக்கையில் தென்வியட்நாமில் ஏற்படும் குழப்பம் கம்யூனிஸ்டுகளாலேயே ஏற்படுகின்றனவென்று கூறினர்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. கென்னடியின் விசேஷ தூதர் திரு. ஹரிமன் சமீபத்தில் தென் வியட்நாம் தலைநகரான சைக்கோனுக்குச் சென்று அரசாங்கத் தலைவர்களைச் சந்தித்தும் பேசினர்.

---

மலாயா, மே. 5

மலாயாவில் 1967ம் ஆண்டு தொடக்கம் மலாய் மொழி மட்டுமே உத்தியோகமொழியாக இருக்கும் என்று மலாயா பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

## ஆசைத்தம்பிக்கு அபராதம்

சென்னை, மே. 5

திராவிடமுன்னேற்றக் கழகப் பிரமுகரும் சென்னை ராஜ்ய சபை உறுப்பினருமான திரு. ஏ. வி. பி. ஆசைத் தம்பி தமது 'தனி அரசு' பத்திரிகையில் சென்னை மந்திரி சபையை இழிவுபடுத்தக் கூடிய முறையில் எழுதியதாகக் குற்றம் சாட்டித் தொடரப்பட்ட வழக்கில் சென்னை உயர் நீதி மன்றம் திரு. ஆசைத்தம்பிக்கு 300 ரூபாய் அபராதம் விதித்தது. அபராதம் கட்டத் தவறினல் மூன்று மாதம் வெறுங்காவல் சிறைத்தண்டனை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

---

## தியாகராஜர் 202வது ஆண்டுவிழா

### புதுடில்லியில் ஆரம்பம்

புதுடில்லி மே 5

இசைமேதை தியாகராஜரின் 202 வது ஆண்டு விழா நேற்று புதுடில்லியில் ஆரம்பமானது. இவ்விழாவை பிரதமர் ஸ்ரீ நேரு ஆரம்பித்து வைத்தார். நாதஸ்வர இசைவிருந்தும் இன்னிசை விருந்தும் நேற்றைய விழாவில் இடம் பெற்றது.

இவ் விழாவுக்கு ராஷ்டிரபதி ராஜேந்திரபிரசாத் அனுப்பி வைத்த ஒரு செய்தியில் தியாகராஜரின் நினைவுக்கு நாம் செய்யவேண்டியது அவரது நூல்களை இந்திய மொழிகளில் வெளியிடுவதுதான் என்று குறிப்பிட்டிருந்தார்.

## வறுமையும் பிணியும்

### 'ஒழித்துக்கட்டுவதே அமெரிக்காவின் கொள்கை'

வாஷிங்டன், மே 5

வறுமையையும் பிணியையும் உலகிலிருந்து ஒழித்துக்கட்டுவதற்காகத்தான் அமெரிக்கா பாடுபடுகிறதென்றும் இதற்காகவே பல்வேறு நாடுகளுக்கும் அமெரிக்கா உதவியளிக்கிறதென்றும் அமெரிக்க உதவி ஜனாதிபதி திரு. ஜோன்சன் கூறினர்.

உலகில் பஞ்சமும், பிணியும் நீங்கிவிட்டால் கம்யூனிஸம் அழிந்துவிடும் என்றும் அவர் கூறினர்.

## 4000 விசேஷ துருப்புக்கள்

### அங்கோலாவுக்கு அனுப்பப்பட்டன

லண்டன், மே 4

அங்கோலாவில் தேசிய வாதிகளின் சுதந்திரக் கிளர்ச்சியை அடக்குவதற்கு காட்டுப் பயிற்சிபெற்ற 4000 போர்ச்சுக்கல் துருப்புகள் வடக்கு அங்கோலாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

தேசிய வாதிகளின் கிளர்ச்சியை அடக்குவதற்கு போர்ச்சுக்கல் தனது முழுப் படைப் பலத்தையும் உபயோகிக்கும் என்று போர்ச்சுக்கலின் வெளி உடமைப் பிரதேச மந்திரி அறிவித்துள்ளார்.

# முதல் எதிரிக்கு 5 வருடச் சிறை; 2-வது எதிரி விடுதலை

## அளவக்கை கொலை முயற்சி வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

மன்னர் மாவட்டத்தைச் சேர்ந்த முருங்கனிலுள்ள அளவக்கை என்னுமிடத்தைச் சேர்ந்த ஆர். இராமநாதன் என்பவரை சென்ற வருடம் மேமாதம் 16-ந் திகதி கொலை செய்ய எத்தனித்ததாக பொன்னையா செல்லத்துரை, தம்பு பொன்னையா ஆகியோர் மீது குற்றம் சாட்டித்தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டது.

விசாரணை முடிவில் முதல் எதிரிக்கு ஐந்து வருடக்கடுங் காவல் தண்டனை விதித்து நீதியரசர் என். சின்னத்தம்பி தீர்ப்பளித்தார் இரண்டாவது எதிரி விடுதலை செய்யப்பட்டார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு எஸ். சிவராசா வழக்கு விசாரணையை ஆரம்பித்து வைத்தார். திரு. வி. ரி. நவரத்தினத்தின் அனுசரணையுடன் திரு எஸ். நாகராஜாவுடன் திரு. ரி. கணேசலிங்கம் எதிரிகள் சார்பில் ஆஜரானர்.

கானட்டாவில் வசிக்கும் 35 வயது தொழிலாளியான ஆர். ராமநாதன் சாட்சியமளிக்கையில் பின்வருமாறு கூறினர்:

இரண்டாவது எதிரி பொன்னையாவின் மகள் தில்லையம்மாவை நான் கலியாணம் செய்தேன். முதல் எதிரி இரண்டாவது எதிரியின் மகன். சம்பவம் நடைபெற்ற தினத்தில் எனது மாமா, மச்சான் ஆகியோரும் நானும் வீட்டிலிருந்தோம். இச் சம்பவம் நடைபெறுவதற்கு சுமார் பத்துமாதங்களுக்குமுன் தான் நான் கலியாணம் செய்தேன். எல்லோரும் ஒரே வீட்டில் வசித்து வந்தோம்.

சம்பவம் நடைபெற்ற தினத்தன்று காலை இரண்டாவது எதிரியான எனது மாமா என்னை தூஷித்தார். இப்படித் தொந்தரவு கொடுத்தால் அந்த வீட்டில் தொடர்ந்து என்னல் இருக்க முடியாதென்றும் மனைவியைக் கூட்டிக்கொண்டு எனது தகப்பன் வீட்டுக்குப்போக விரும்புகிறேனென்றும் சொன்னேன். எனது மனைவியைக் கூட்டிக்கொண்டு வீட்டைவிட்டு நான் உயிருடன் வெளியேறத்தான் விடமுடியாது என்று முதல் எதிரியான எனது மச்சான் சொன்னர். நான் வீட்டிலிருந்து புறப்பட்டு அருகிலுள்ள ஒரு கடைக்குச் சென்றேன். எதிரிகளிருவரும் என் பின்னல் ஓடி வந்தனர். முதல் எதிரி என்னைக் குத்தினர்.

விசாரணை முடிவில் முதல் எதிரியை ஜூரிகள் குற்றவாளியாகக் கண்டனர்.

நீதியரசர் முதல் எதிரிக்கு ஐந்துவருடக் கடுங்காவல் தண்டனை விதித்து இரண்டாவது எதிரியை விடுதலைசெய்து தீர்ப்பளித்தார்.

---

## இந்தியச் செய்திகள்

பிரிட்டனுக்கும்- இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற கப்பல் வர்த்தகத்தில் 30 சதவிகிதமும், ஐரோப்பாவுக்கும்- இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற கப்பல் வர்த்தகத்தில் 40 சதவிகிதமும் இந்தியாவிற்குச் சேரும்.

இந்தியா இப்போது ரயில் என்ஜின்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் கட்டத்தை அடைந்துவிட்டதாயும், இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்படுகிறது.

9 சிப்பந்திகளுடன் காணமற்போன டகோடா விமானத்தைத் தேடும்முயற்சி தொடர்ந்து நடைபெறுவதாய் திரு. கிருஷ்ணமேனன் லோக் சபையில் கூறினர்.

போலிசாருக்கு வீடு கட்டுவதற்கென மத்திய அரசாங்கம் 12கோடிரூபாய்,ராஜ்யஅரசாங்கங்களுக்கு வழங்கியிருக்கிறது.

ஒரிஸா இடைத்தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி 35 அபேட்சகர்களை நிறுத்தும் என அறிவிக்கப்பட்டது.

* * *

ஆஜ்மீரிலுள் ரயில்வே தலைமைக் காரியாலயத்தில் பெருந் தீவிபத்து நிகழ்ந்துள்ளதாயும் சேதம்பற்றிய விபரம் இன்னும் வெளியாகவில்லை என்றும் தெரிகிறது.

* * *

1960ம் ஆண்டு இந்தியாவில் குற்றங்களின் எண்ணிக்கை குறைந்திருக்கிறது.

---

## வாஷிங்டனில் ஜெனரல் போகிபா

வாஷிங்டன், மே 5

டுனிஸிய ஜனாதிபதி ஜெனரல் ஹபிப்போகிபா ஜனாதிபதி கென்னடியுடன் நேற்றுப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

அமெரிக்க காங்கிரஸில் ஜெனரல் போகிபா உரை நிகழ்த்துகையில் காலனி ஆட்சியை ஒழித்துக்கட்ட அமெரிக்கா எடுத்துவரும் முயற்சியை அவர் பாராட்டினர்.


## வரிவிளம்பர விகிதங்கள்

ஜனனம், திருமணம், மரண அறிவித்தல், வீடு வளவு விற்பனவு, தேவை மற்றும் வாங்கவோ, விற்கவோ இது போன்ற சகல அறிவித்தல்களும் 'ஈழநாடு' பத்திரிகையில் வரிவிளம்பரம் செய்ய ஏற்றுக்கொள்ளப்படும்.

முதல் 20 வார்த்தைகளுக்கு ரூ.3-00. மேற்பட்ட ஒவ்வொரு வார்த்தைக்கும் மேலதிகமாக 10 சதம் அறவிடப்படும்.






## சிரநேத்திராஞ்சனத் தைலம்

விடுதலை அளிக்கும்போது
நீங்கள்

★ சிரசு ★ கண் ★ மூக்கு

சம்பந்தமான வியாதிகளினல்
துன்புறவும் வேண்டுமா?

தினமும் சிரசிலிருக்கும் இத்தைலத்தின்
சக்தி நிறைந்த ஒவ்வொரு
20 சொட்டுப் பிரமாணமும்
ஆச்சரிய பலனையளிக்கும்.

காலம் நீடித்த நோயாளர்கள்
எம்மிடம் தொடர்பு கொள்ளவும்.

**மு. க. ஜெகநாதன்**
யூனனி கண் நிபுணர்.
பெரியகடை, யாழ்ப்பாணம்.

# ★ சாந்திநிகேதன் நினைவுகள் ★

—திருமதி ந. மகேஸ்வரி தேவி—

குருதேவரை நான் முதன் முதலாகச் சென்னையில் 1928-ம் ஆண்டு ஜூன் மாதம் 14-ம் திகதி பிற்பகல் சந்தித்தேன். அதற்கு இரண்டொரு தினங்களுக்கு முன்னர் கொழும்பிலிருந்து குருதேவரின் அந்தரங்கக் காரியதரிசியாக அப்போதிருந்த திரு. அரியம் வில்லியம்ஸ் அவர்களிடமிருந்து, எனது தகப்பனருக்கு ஒரு கடிதம் கிடைத்தது. அதில் கவியரசர் தமது ஐரோப்பியப் பிரயாணத்தைச் சுகவீனம் காரணமாகவும், அவர் செய்யவிருந்த ஹிபேட் (Hibbert) விரிவுரைகள் பின்போடப்பட்டமை காரணமாகவும் ரத்துச்செய்து விட்டபடியால் அவர் சென்னைக்கு 14-ம் திகதி வந்து மறுநாள் கல்கத்தாவுக்கு பிரயாணமாவாரெனவும், என்னை அன்றே கவியரசரைச் சந்திப்பதற்கு நுங்கம்பாக்கத்திலுள்ள ஸ்ரீ கண்டெத் அவர்களின் இல்லத்திற்கு வரும்படியும் கண்டிருந்தது.

14-ம் திகதி பிற்பகல் திரு. அரியம் அவர்கள் என்னைக் கவியரசரைப் பார்ப்பதற்கு வரும்படி அழைத்தார். எனது தகப்பனர் ஊரில் இல்லாதபடியால் என் தாயாரும் நானுமாக அவருடன் சென்றேம். கவியரசரைக் கண்டேன். அவரைப் பார்த்ததும் ஒரு மஹரிஷியைப் பார்ப்பது போலவேயிருந்தது. நூல்களில் படித்த ரிஷிகளும் ஆச்சிரமங்களும் என் மனக்கண் முன் ஓடி மறைந்தன. வீணையை எடுத்து வாசிக்கும்படி அவர் என்னிடம் கூறினர் வேறும் ஏதோவெல்லாம் என்னைக் கேட்டார். அவையாவும் இப்போது எனக்கு ஞாபகமில்லை. கவியரசர் பங்களூருக்குச் செல்வதற்குப் பிரயாணச்சீட்டு ஒழுங்கு செய்வதற்காகச் சென்றிருந்த திரு. அரியம் அவர்கள் திரும்பி வந்ததும், அவரை அழைத்து, "அவரிடம் திறமை இருக்கின்றது எந்த விஷயத்தையும் மிக விரைவாகக் கிரகித்துக் கொள்வார். அவர் எம்முடன் வருவார் என நம்புகின்றேன்" என்று ஆங்கிலத்தில் சொன்னர். இதைநான் கேட்டதும் அளவிலா மகிழ்ச்சியடைந்தேன். ஆச்சிரமத்திற்கு நான் புறப்படும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன்.

நான் எதிர்பார்த்திருந்த நாளும் வந்தது. அதே வருஷம் ஆகஸ்ட் மாதம் 25-ம் திகதி சனிக்கிழமை இரவு சாந்திநிகேதனுக்குக் கல்கத்தா மெயிலில் பிரயாணமானேன், தனியாகவே. திங்கட்கிழமை பகல் 11-30 க்கு ஹௌரு ஸ்டேஷன் வந்தடைந்தேன். அங்கு 'அரியம்தா' (வங்க மொழியில் அண்ணனை தாதா Dada என்றே அழைப்பது) அவர்கள் என்னைச் சந்தித்தார்கள். அங்குள்ள இளைப்பாறும் அறையில் சிரமபரிகாரம் செய்துவிட்டு உணவையும் முடித்துக்கொண்டு போல்பூருக்குப் பிரயாணமானேம். போல்பூரை மாலை ஆறரை மணியளவில் அடைந்தோம். (கல்கத்தாவிலிருந்து போல்பூர் கிழக்கே 99 மைல் தூரத்திலுள்ளது) ஆச்சிரமத்துக்குப் புகையிரத நிலையத்திலிருந்து

**சங்கீதஞானமும், கலை ஆர்வமும்மிக்க திருமதி நவரத்தினம் மகேஸ்வரிதேவி திரு. பி. ஆர். எழுத்தச்சனிடம் வீணை பயின்றர். பின்னர்பேராசிரியர் சாம்பமூர்த்தி நடாத்திய விடுமுறைகால இசைக்கல்லூரியில்இசைபயின்று முதற் பிரிவிற் சித்தி எய்தினர். தங்கப் பதக்கமும் பெற்றர்.**

**ரவீந்திரநாத தாகூர் அளித்த உபகாரச் சம்பளத்தைப்பெற்றுசாந்திநிகேதனில் இருவருடகாலம் [1928–1930] இசை, ஓவியம் ஆகியவற்றில் பயிற்சி பெற்றதுமன்றி குருதேவரின் ஆசியையும் பெற்றர்.**

**யாழ்ப்பாணம் சங்கீத சமாஜத்தை நிறுவி 1933-1936வரை அதன் செயலாளராகப் பணியாற்றினர். 'இந்திய சங்கீதம்' (முதற்புத்தகம்) 'The Veena Tutor' ஆகிய நூல்களையும் எழுதியுள்ளார்.**

**சாந்தி நிகேதனிற் கல்வி பயிலும் பேறுபெற்ற அம்மையார் இக்கட்டுரையில் தமது நினைவுகளைச் சுவைபட எடுத்துரைக்கின்றர்.**

இரண்டு மைல் உள்ளே செல்லவேண்டும். ஆச்சிரமத்தை அடைந்ததும் எனக்கு என்னையே நம்பமுடியவில்லை. எல்லாரும் ஒரு கனவுபோலிருந்தது.

## அமைதியின் இருப்பிடம்

அன்றிரவோ அல்லது மறுநாள் விடியவோ எனக்கு இப்போ ஞாபகமில்லை. நான் படுக்கையில் தூங்கிக்கொண்டு இருக்கும் பொழுது தூரத்திலிருந்து பையன்களின் கானம், அமைதியைப் பிளந்துகொண்டு மெல்ல மிதந்து வந்து என் காதுகளைத் துளைத்தது. அந்தப் பையன்களின் பஜனையானது எங்கள் பெண்கள் வீடு திவாயில்வரை வந்து திரும்பிவிட்டது. அதுதான் (Bytalik) பைத்தாலிக். சாந்திநிகேதனில் தினம்வேலை ஆரம்பிக்குமுன் இப் பஜனையுடன் தொடங்குவது வழக்கம். இப்படியே இரவிலும் படுக்கைக்குச் செல்லுமுன் பஜனைக் கோஷ்டி செல்வதுண்டு பாட்டு அடங்கியதும் அப்பரந்தவெளியில் அமைதி நிலவும். சாந்திநிகேதன் என்ற பெயர் எதற்காகக் கொடுக்கப்பட்டது என்பதை அப்போதுதான் உணர்ந்தேன். அது உண்மையில் அமைதியின் இருப்பிடமே.

## மரநிழலின் கீழ்

அதிகாலையில் 4 மணிக்கு படுக்கையை விட்டு எழுவதற்கு மணி அடிக்கும் எல்லோரும் எழுந்து காலைக்கடன்களை முடித்து ஸ்நானம் செய்வோர் செய்துமுடிக்க சரியாக 6 மணிக்கு 'உபாஸ'னவுக்குச் செல்வதற்காக ஒரு மணி அடிக்கப்படும். அப்போது எல்லோரும் அவரவருக்கு இஷ்டமான இடத்திற்கு ஓர் 'ஆஷன்' (சிறிய ஜமக்காளம்) எடுத்துக் கொண்டு வெளியே உள்ள மரங்களின்கீழ் உட்காரச் செல்வோம் நான் சூரியோதயத்தைப் பார்ப்பதற்காக கிழக்குப்பக்கமாய் உள்ள மரத்தடிக்குப்போவேன். ஆசிரமத்தில் சமயப் பாகுபாடோ வேற்றுமையோ கிடையாது. எம்மதமும் சம்மதமே ஆனபடியால் நாங்கள் இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும், பௌத்தர்களும், பிரமஸமாஜத்தவர்களும் ஒன்று சேர்ந்தே ஒற்றுமையாக இருந்தோம். உபாசன பதினைந்து நிமிடங்கள் வரைக்குமே நடைபெறும். இவ் உபாசன அவரவர் விருப்பத்தையும் மனநிலையையும் பொறுத்தது. தியான ஒழுங்குகள் குறித்து ஒரு விதமான போதனைகளும் எங்களுக்குக் கொடுக்கப்படவில்லை. ஏகாந்தமும் அமைதியுமே ஆவர்களின் குரு. 6.15 க்கு உபாசன முடிவு மணியுடன் மாணவ மாணவியர் எல்லோரும் நூல்நிலையத்துக்கு அருகில் ஒன்றுகூடி நின்று சமஸ்கிருத ஸ்லோக மொன்றைச் சொல்லிவிட்டுச் காலைச் சாப்பாட்டுக்குச் செல்வோம். காலைச் சாப்பாடு அனேகமாக லூச்சியும் (சப்பாத்தியைப் போன்றது) ஒரு கோப்பை பாலும் தான். 7-30 க்கு வகுப்புகள் ஆரம்பமாகும். மழையில்லாதிருந்தால் மர நிழல்களின் கீழேதான் சாதாரணமாக வகுப்புகள் நடைபெறும். ஒவ்வொரு மாணவரும் தம்முடைய புத்தகங்களுடன் இருப்பதற்கு ஓர் ஆஷனம் எடுத்துச் செல்வர். இக்காலத்து நெருங்கிய வகுப்பறை போன்றதல்லாது. இயற்கையை அனுபவித்துக் கொண்டே குருவும் சிஷ்யரும் கீழே உட்கார்ந்து படிப்பார்கள். மனத்தையும் உடலையும் தக்கமுறையில் ஒப்புவதற்குச் சூழ்நிலையே பிரதானம். அதை ஏற்படுத்த ஒரு சாந்திநிகேதனவேயே முடியும். அங்குள்ள மாணவர்கள் உடலும் உணவும் ஒருமித்து வளம்பெற்றுப் பரந்த நோக்குடன் வெளியேறுவார்கள்.

## ஆன்மவிருத்தி

பத்தரை மணிக்குக் காலை வகுப்புக்கள் முடிவடையும் மத்தியான உணவுக்குப்பின் இளைப்பாறுவார்கள். மாலை நேர வகுப்புகள் 1-30 க்குத் தொடங்கி 3-30 க்கு முடியும். அதற்குள் பாடதிட்டமோ இங்குள்ள பள்ளிக்கூடங்களைப் போல் கல்விப் பகுதியுடன் சம்பந்தப்பட்டதல்ல. வெறும் குருட்டுப் பாடங்களுக்கு அங்கு இடமில்லை. உண்மையான அறிவும் கலாச்சாரமும் அளிப்பதே சாந்திநிகேதனின் நோக்கம். சாந்திநிகேதனின் நோக்கம் உயர்வும் மேம்பாடுமே யாகும். அரைகுறைப் படிப்புள்ள பெண்களையும் தற்பெருமைபிடித்த பெண்களையும் உற்பத்திசெய்யும் ஆலையல்ல சாந்திநிகேதன். அங்கு உடலுக்கும், உள்ளத்திற்கும் ஆன்மாவுக்கும் உணவு அளிக்கப்பட்டது. இரவு 9 மணிக்கு அன்றைய நிகழ்ச்சிகள்யாவும் முடிவடையும். படுக்கைக்குச் செல்வோம். அதன்பின் பஜனைக் கோஷ்டி (ஆணே, பெண்ணே) ஒன்று வலம் வந்து செல்லும்.



### வங்கத்துதித்த செங்கதிர் வேந்தர்

நாவலந்தீவின் நலத்தினை விளக்கும் பாவலர் பலருள் வங்கமொழிக் கவிவாணராகிய ரவீந்திர நாதர் மங்காத கீர்த்தி படைத்தவர். 'ரவி' என்னும் வடமொழி, தமிழிற் 'செங்கதிர்' என வழங்கும் விண்ணவர் தலைவனாகிய இந்திரனைத் தொல்லாசிரியர் 'வேந்த' னென வழங்கினர். 'ரவீந்திரர்' தமிழ் வழக்கிற் 'செங்கதிர் வேந்தர்' ஆவார்.

—விபுலானந்த அடிகளார்

அக்காலத்தில் அங்குள்ள கட்டடங்களுள் கலாபவனக் கட்டிடமே அதிக சிறப்பு வாய்த்தது. இது ஸ்ரீ நந்தலால் போஸின் (இன்றைய சிறந்த சைத்திரிகர்) ஆதிக்கத்திற்குட்பட்டது. பரோடாவின் கேய்க்வாரின் அன்பளிப்பாகும்.

குருதேவரின் தந்தையாரான தேவேந்ரநாத் தாகூர் வசித்த இரட்டை மாடி இல்லம் அப்பொழுதும் நல்ல நிலையில் இருந்தது. அதுவே அதிதிகள் இல்லமாகவும் இருந்தது. தவிர இந்தியாவின் நண்பரான திரு பியர்ஸன் அவர்களின் ஞாபகார்த்தமாக ஓர் ஆஸ்பத்திரியுமுண்டு. மாணவிகட்கெனவே ஒரு விடுதியில்லம் 'ஸ்ரீ பவன்' என்னும் பெயருடனிருந்தது. மேலும் ஒரு புதிய கட்டடமும் 25000 ரூபாய் செலவில் அமைக்கப்பட்டிருந்தது. நான் அங்கு இருக்கும் பொழுது அதுவே அங்குள்ள கட்டடங்களுள் சிறப்புவாய்ந்தது.

## பல பாகங்களிலிருந்தும்

சாந்திநிகேதன் ஒரு சொந்த மின்சார நிலையத்தையும், கூட்டுறவுப் பண்டகசாலையையும், தபால் தந்திக் கந்தோரையும் தனக்கெனவே வைத்திருந்தது. அதன் நூல் நிலையமோ மிகப் பெரியது. அப்போதே 30,000 புத்தகங்களையுடையதாயிருந்தது. உலகிலுள்ள பல பாகத்திலிருந்தும் மாணவர்கள் அங்கு வருவதுண்டு. நானங்கிருந்த சமயத்தில் திபேத்திலிருந்து இரு லாமாக்களும், ஒரு சீனர், ஒரு ஜெர்மானியர், ஒரு இத்தாலியர், ஒரு யப்பானியர், ஒரு பிரெஞ்சுக்காரரும், ஒல்லாந்திலிருந்து ஒரு டச்சுத் தம்பதிகளும் வந்தார்கள். டச்சுத் தம்பதிகளாகிய டாக்டர் பாக்கே ஒரு சிறந்த ஐரோப்பிய சங்கீத நிபுணர். இந்திய சங்கீதத்தைக் கற்றறிவதற்காகவே இந்தியாவுக்கு வந்திருந்தார். நான் அங்கு இருந்த காலத்தில் அவர் தமது பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெறுவதற்காக அத்துறையில் ஒரு நூல் எழுதுவதில் ஈடுபட்டிருந்தார். இவற்றினுக்கும் மேலாக ஒரு சிங்கள பௌத்த குரு வண: சரணங்கர தேரோவும் அங்கு பயில்வதற்காக வந்திருந்தார். நான் அவருடன் சிங்களத்தில் பேச முயல்வதுண்டு. அவர் கம்பஹாவிலிருந்து வந்திருந்தார்.

நான் சென்ற காலத்தில் குருதேவரும் ஸ்ரீ நந்தலால் போஸும் இருந்ததே ஒரு பெரும் பேறாகும். குருதேவரிடம் நாங்கள் அடிக்கடி செல்லுவதுண்டு. அவருக்கு எனது வீணை வாசிப்பைக் கேட்க அதிக விருப்பம். வீணையைக் கொண்டு வந்து வாசிக்கும்படி சொல்லுவார். நானும் சென்று வாசிப்பேன். சில சமயங்களில் தாம் பாட்டுகள் இயற்றுவதற்காக என்னைச் சிலசில பாட்டுக்களை வாசிக்கும்படியும் சொல்லுவார். சில சமயங்

(6-ம் பக்கம் பார்க்க)

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கும்
33
303
3003
ஊதுபத்திகளை
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநெகல.



ஸ்ரீ நந்தலால் போஸ்

### மணிவாக்கு

போதும் என்ற மனம் உனக்கு இல்லையாயின் உலகம் முழுவதுமே உன் வசம் இருந்த போதிலும் நீ துன்பமே அடைவாய்.

—செனீகா


# ஈழநாடு

EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு சித்திரை மீ 24 உ (6-5-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna Telegrams EELA NADU Jaffna Phone: 389.


## கவி அரசர் தாகூர்

இன்றைக்குச் சரியாக நூறு ஆண்டுகளுக்கு முன் கவி அரசர் தாகூர் பாரத புண்ணிய பூமியில் அவதரித்தார். அவரது நூற்றுண்டு ஜயந்தி விழாவை இந்தியா, இலங்கை மட்டுமன்றி உலகிலே பல நாடுகளும் கொண்டாடிப் பெருமையும் பயனுமடைகின்றன.

நாடு அரசியல் அடிமைப் பட்டுக் கிடக்கையில் மக்கள் தங்களது கலை ஞானங்களையும் இழந்து நிலைகுலைந்து, தப்பு வழிகளில் செல்லக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. விசுவ பாரதி சர்வகலாசாலை அமைத்து அந்த ஆபத்திலிருந்து பாரதநாட்டை மீட்டவர் குருதேவரேயாவர். பாரத நாட்டை மட்டுமன்றி ஈழநாட்டு மக்களையும் மீட்டாரென்றும் கூறலாம். இந்தியாவும் இலங்கையும் உடல் வேறுயினும் உயிரும் உள்ளமும் ஒன்றேயல்லவா?

இன்று உலகம் சாந்தி குலைந்து தடுமாறுகின்றது. "உன் மனத்துக்குள்ளே சாந்தி ஏற்பட்டால், உன்னைச்சுற்றி இருக்கிறவர்களிடம் சாந்தி ஏற்படும். அப்புறம் உன் வாழ் நாள் எதற்கு வீண் நாளாகப் போகிறது?" என 'கீதாஞ்சலி' மூலம் நமக்குச் சாந்தி உபதேசிக்கின்றுர் அவர். சாந்தியின்றி, சஞ்சலமடைந்த உள்ளங்கள், குருதேவரின் 'கீதாஞ்சலி' யைச் சற்றே படித்தால், மனச்சாந்திக்கு வழிபிறக்கும். "சாந்தி நிகேதன" மான அவரை உலக மக்கள் இன்று நன்றியுடன் போற்றக் காரணமும் இதுவே.

1934-ம் ஆண்டு ஜூன் மாதம் இலங்கைக்கு விஜயம் செய்த கவி அரசர், யாழ்ப்பாணத்தையும் மதித்து, இங்கு வருகை தந்தார். "இலங்கையர் உண்மையில் இந்தியரேயாவர்" என்று பலகாலும் அவர் வற்புறுத்தினர். அரசியல் காரணமாக இன்று வேற்றுமை உணர்ச்சிகள் பலதோன்றி, இலங்கையின் பொது வாழ்வைச் சீர்குலைக்கின்றன. கவி அரசரின் நூற்ருண்டுத் திருவிழாவினைக் கொண்டாடுபவர்கள், சிறப்பாகத் தென்னிலங்கையிலுள்ள அரசியல் வாதிகள், குருதேவரது அந்த ஒற்றுமை மந்திரத்தை நினைவு கூர்வார்களேயாயின், நமது இன்றைய அரசியல் சிக்கல்கள் மறையவும் அமைதி பிறக்கவும் வழிகாணலாம். அந்த ஒற்றுமை, சாந்தி மந்திரத்தை மீண்டும் நமக்கு அறிவுறுத்தும் முகமாகவே அவரது நூற்ருண்டு ஜயந்தி இச் சமயம் வந்துள்ளதுபோல் நமக்குப் படுகிறது. வாழ்க குருதேவர் ரவீந்திர நாத தாகூர்!

---

## தணிக்கை

பார்லிமெண்ட் நடப்பு விவரங்களைத் தணிக்கை எதுவும் செய்யாமல் அப்படியே பத்திரிகைகளில் பிரசுரிக்க, அரசாங்கக் கட்சித் தலைவர் அனுமதித்தது பாராட்டத்தக்கது. வடக்கு, கிழக்கு மாகாணங்களின் நிலைமை பற்றி பல அங்கத்தவர்கள் பேசியுள்ளவை, டுப்படியே பிரசுரிக்க அனுமதிக்கப்பட்டதால் உண்மை நிலைமையை அரசாங்கமும் பொது மக்களும் அறியவும் வீண் வதந்திகள் பரவாமல் தடுக்கவும் பெரிதும் உதவும்.

பல வீண் வதந்திகள் பரவியதைப் பற்றி பிரதமர் சிறிமா தமது அறிக்கையில் குறிப்பிட்டு, அவ்வித வதந்திகளை மக்கள் நம்ப வேண்டாமென்றும் கேட்டுக் கொண்டார். தணிக்கை காரணமாக பலபல வதந்திகள் பரவுகின்றன. வதந்திகளைத் தடுக்க வேண்டுமானுல், பத்திரிகைத் தணிக்கையைக் கூடிய சீக்கிரத்தில் அகற்ற வேண்டும். அவசர கால நிலைமை பற்றி பார்லிமெண்டில் நடைபெற்ற விவாத விவரங்களைத் தணிக்கைசெய்ய வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதியதால், பத்திரிகைத் தணிக்கையைப் பற்றியும் அரசாங்கம் புனராலோசனை செய்து அதை நீக்குமாயின், வீண் வதந்திகள் கிளம்பாதிருக்கவும் நிலைமை மேம்படவும் இலங்கையில் ஜனநாயகம் பலப்படவும் கூடும்.

# உலகபுகழ்பெற்றகவியரசர் தாகூர் நூற்றுண்டு விழா

— டாக்டர் ஜோன் டி. றீட் —

ரவீந்திரநாத் தாகூரின் நூருவது பிறந்தநாள் கொண்டாட்டம் ஆரம்பமாகிவிட்டது. கவிஞர் தாகூர் பலவகை திறமைகள் அமையப்பெற்ற பெருங் கலைஞர். தாகூர் தம் கவிதைகளால் உலகப்புகழ் பெற்றவர். வங்காளத்தில் தோன்றிய கவிஞர் தாகூரின் நினைவாக அவரைப்போற்றும் கட்டுரைகளும், கவிதைகளும், இலக்கியப் படைப்புகளும் உலகமெங்கும் வெளியாகி வருகின்றன.

நான் அவரைப் பற்றிக் கூறப்போவது மிகச்சாதாரணமானது. மத்திய மேற்கு நகரமாகிய சிக்காகோவில் 1912-ம் ஆண்டு, செல்வி ஹரியாட் மன்ரோ என்னும் கவிஞர் ஒருவர் "கவிதைச் செய்யுள் சஞ்சிகை" என்னும் ஒரு சிறிய சஞ்சிகையை ஆரம்பித்தார். அப் பெண்மணி கவிஞராக இருந்தது மன்றி, கவிதைப் புலவராகவும் விளங்கினர். அவர் ஆரம்பித்த சஞ்சிகை அமெரிக்கக் கவிதை இலக்கியத்துக்குப் புத்துயிர் அளித்தது. கார்ல் சான்டன் பேர்க், வாச்சல் லின்ட்ஸே, எட்கார் லீ மாஸ்டர்ஸ், எஸ்ரா பவுண்ட் முதலிய சிறந்த கவிஞர்களும் சஞ்சிகையின் ஆரம்ப காலத்தில் அதில் கவிதைகள் எழுதினர்கள். அவர்களிற் பலர் அமெரிக்காவின் மத்திய பகுதியைச் சேர்ந்தவர்கள். அப்பகுதிகளில் கவிதை தோன்ருது என்று சொல்லுவது வழக்கம். அமெரிக்க நாட்டில் ஐரோப்பிய மயமாய் விளங்கும் கிழக்குக் கடற்கரையில் மட்டுமல்ல, மற்ற இடங்களிலும் கவிதையும் கலையும் பிறக்கும் என்பதற்கு இந்தச் சஞ்சிகை ஒரு சான்ருயிற்று.

சஞ்சிகையின் வெளிநாட்டு நிருபர் எஸ்ரா பவுண்ட் லண்டன் மாநகரில் தாகூரைக்கண்டார். கீதாஞ்சலி யின் கவிதைகள் சிலவற்றை "கவிதை" சஞ்சிகையில் வெளியிட வேண்டுமென்று விரும்பினர். "கவிதை" சஞ்சிகையின் ஆசிரியர் கவிஞர் தாகூரைப்பற்றிக் கேள்விப்பட்டதேயில்லை. எனினும் பக்திச் சுவை ததும்பும் தாகூரின் கவிதைகளைப்படித்த போது, அவரும் அவருடைய துணை எழுத்தாளர்களும் பேரின்பம் அடைந்தனர். எனவே, 1912-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் தாகூரின் கவிதைகள் சஞ்சிகையில் வெளியாயின.

எனக்குத் தெரிந்தவரை மேல் நாட்டில் முதன் முதல் வெளியான தாகூரின் கவிதைகள் இவையே. மேல் நாடுகள் கவிஞர் தாகூரின் கவிதைத் திறனைக்காண அவை துணை செய்தன. ஓராண்டுக்குப் பின் அவர் நோபல் பரிசு பெறுவதற்கும் அவை வழிகோலின என்லாம். தாகூரையும அவரது இலட்சியங்களையும் அமெரிக்கா பாராட்டத் தொடங்கியதும் அப்போதுதான். அன்று முதல் இன்றுவரை அமெரிக்கா நெடுங்காலமாக அவரைப் பாராட்டி வருகிறது.

### அமெரிக்க விஜயம்

பின்னர் ரவீந்திரநாத்தாகூர் அமெரிற்காவுக்கு விஜயம் செய்தார். அவருடைய மகன் ரவீந்திரநாத் 1906 முதல் 1909 வரை இல்லினய் பல்கலைக் கழகத்தில் கல்வி பயின்ருர் 1912-இல் அவர் தமது மனைவியோடு இல்லினய்ஸ் மாநிலத்திலுள்ள அர்பானு நகரில் விவசாய இயல் பட்டப் படிப்புக்காக அமெரிக்காவுக்கு மீண்டும் சென்ருர். அந்த ஆண்டு அக்டோபர் மாதம் அவரது இல்லத்தில் அவருடைய தந்தையார் ரவீந்திர நாத் வந்து தங்கினர். ஹார்வாட் பல்கலைக் கழகத்தில் அவர் நிகழ்த்திய விரிவுரைகளை அங்கு தங்கியிருந்தகாலத்திலே தான் எழுதினர். தம் தந்தையாரின் விரிவுரைகளை 'டைப்' அடிக்க வேண்டியிருந்ததால், ரவீந்திரநாத் தமது படிப்பை நிறைவேற்ற முடியாது போயிற்று. சாதனு என்னும் தலைப்பில் அவ் விரிவுரைகள் நூல்வடிவில் வெளியாயின.

கவிஞர் தாகூரும் அவருடைய மகனும் "கவிதை" எனும் சஞ்சிகையில் கீதாஞ்சலி யிலுள்ள கவிதைகள் வெளியிடப்பட்டதை அறிந்து, செல்வி மன்ரோவுக்கு அது பற்றி எழுதினர். செல்வி மன்ரோ சிக்காகோ நகருக்கு வருமாறு கவிஞருக்கு அழைப்பு அனுப்பினர். திருமதி. வில்லியம் வாஹன் மூடி என்னும் ஓர் அம்மையாரும் அவரை வருமாறு அழைத்தார். திருமதி மூடி புகழ்பெற்ற அமெரிக்கக் கவிஞர் மூடியின் மனைவியார். இனி, நிகழ்ந்தவற்றை மன்ரோ எழுதியவாறே இங்கு தருகிறேன்.

"புத்தாண்டு பிறந்து சில நாட்களுக்குப் பின்னர் தாகூர் தம் மனைவியோடும் மருமகளோடும் வந்து சேர்ந்தார். அந்தக் குளிர்காலத்தில் அவர் மூன்று நான்கு முறை விஜயம் செய்தார். அவர் நோபல் பரிசு பெறுவதற்கு முன் அப் பரிசு பற்றிய விளம்பரம் அவருக்குக் கிடைக்க முன் நடைபெற்ற நிகழ்ச்சி இது. எனவே, உலகம் அவரைப்பற்றி அறிய விரும்புவதால் ஏற்படும் இடையூறு எதுவும் இல்லாத காலத்தில் நாங்கள் அவருடன் பழகினேம். மாலையில் திருமதி மூடியின் இல்லத்தில் வங்காள மொழியில் கவிதைகளை அவர் இசையோடு பாடக்கேட்போம். கீழைத்தேயப் பழங்காலஞானி ஒருவரது திருவடியில் அமர்ந்திருக்கிறேம் என்று அப்போது நாங்கள் உணர்வோம்.

திருமதி மூடி, கவிதைஉள்ளம் படைத்த அம்மையார், தாகூருக்கும் அவருக்கும் ஏற்பட்ட நட்பு அம்மையார் இறக்கும் வரை நீடித்திருந்தது. மன்ரோ அம்மையார் 1936-இல் காலமானர். எனினும், அவரது 'கவிதை' எனும் சஞ்சிகை இன்றும் வெளியாகிக் கொண்டிருக்கிறது. சென்ற ஆண்டில் அது ஒரு சிறப்பு மலர் வெளியிட்டது. அதில் தாகூரின் கவிதைகள் சில சேர்க்கப் பெற்றிருந்தன.

---

## புதுடில்லியில் மலாயா எம். பி.க்கள்

புதுடில்லி மே 5

மலாயாபார்லிமெண்ட் பிரதிநிதிகள் எட்டுப்பேர் நேற்று புதுடில்லி வந்து சோந்தனர். சுமார் இருவார காலம் சுற்றுப்பிரயாணம் செய்யவிருக்கும் இக் கோஷ்டி முக்கிய இடங்களுக்கு விஜயம் செய்யும்.

---

## பொலிஸ்இன்ஸ்பெக்டருக்கு பிரியாவிடை

வேலணை மே 4.

ஊர்காவற்றுறைப் பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஜனப். மஜீது அவர்கள் மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு வேலணைக் கிராம மக்கள் சார்பில் வேலணைக் கிராமச் சங்க மண்டபத்தில் கிராமச் சங்கத் தலைவர் ப. கந்தசாமி தலைமையில் ஆண்மையில் ஓர் பிரியாவிடைக் கூட்டம் நடைபெற்றது.

ஜனப். மஜீதின் சேவையைப் பாராட்டி திரு. சி. இராசரத்தினம் ஆசிரியர் உட்படபலர் பேசினர். கூட்ட இறுதியில் ஜனப். மஜீது தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

---

## இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலையம்

இளவாலை இந்து இளைஞர் சனசமூக நிலைய வருடாந்தப் பொதுக் கூட்டம் திரு. வ. சிவசுப்பிரமணியத்தின் தலைமையில் நடை பெற்றது.

மேற்படி சனசமூக நிலைய உத்தியோகஸ்தர்களாக கீழ் வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர்: வ. சிவசுப்பிரமணியம் காரியதரிசி: வே. பாலசிங்கம் தனுதிகாரி: இ. இலங்கநாதன் உபதலைவர்: கா. தம்பு உப காரியதரிசி: க. இராசேந்திரம்.

சு. செல்லத்துரை, வே. குணசிங்கம், க. இரத்தினராசா, அ. பேரம்பலம், க. தெய்வேந்திரம், வே. தருமகுணசிங்கம் ஆகியோரை கொண்ட நிர்வாக சபையொன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

---

## தீர்மானம் நிறைவேறியது

அல்லைப்பிட்டி, வியாழன்.

மண்டைதீவிலுள்ள மீன்சந்தையை இடம் மாற்றி அமைக்க வேண்டுமென்ற தீர்மானம் அல்லைப்பிட்டிக் கிராமச் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறியது.

இது சம்பந்தமான ஒழுங்குகளைக் கவனிக்க மூன்று பேர் கொண்ட உபசபை தெரிவு செய்யப்பட்டுள்ளது.

---

## சித்திரகுப்த விரதம்

காத்தான்குடி, மே. 5

மண்முனை வடகிழக்குப் பகுதியைச் சேர்ந்த கல்லடி உப்போடை, நாவற்குடா, மஞ்சந்தொடுவாய், ஆரயம்பதி ஆகிய இடங்களிலுள்ள சைவ ஆலயங்களில் சித்திரகுப்த விரதம் அனுட்டிக்கப்பட்டது.

அவசரகால நிலை காரணமாக கல்லடி ஸ்ரீ சித்திரவேலாயுதசுவாமி கோயில் உற்சவமும் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

## ஐயாறன் எழுதுவது

33 வருடகாலம் யாழ்ப்பாணத்திலே மேலான கல்விப் பணி புரிந்த ஐரிஷ்காரரான வண. பிதா டி. எம். எல்லாங் அவர்கள், லண்டனிலே சென்றவாரம் காலமான செய்தியைக்கேட்டு, இங்கு பலரும் வருந்துகிறுர்கள். அவர் ஒரு கண்யமிக்க பெரிய மனிதர்.

சென்ட் பாட்ரிக்ஸ் கல்லூரியில் 18 வருடகாலம் பிரின்ஸிபலாகக் கடமையாற்றிய போது, அதன் வளர்ச்சிக்காக அவர் எடுத்த முயற்சி கொஞ்சமல்ல. தமது வாழ்நாளான 65 வருடத்திலே 33 வருட காலம், யாழ்ப்பாணத்திலே சேவைசெய்து கழித்ததால், அவரை "ஐரிஷ் யாழ்ப்பாணத்தவர்" என்று அன்புடன் அழைப்பதுண்டு.

⁂ ⁂ ⁂

யாழ்ப்பாணப் புத்தகசாலைக்கு அஸ்திவாரமிட்டவரில் ஒருவரான வண. பிதா லாங், அதற்காகப் பெருமுயற்சி எடுத்தார். கல்வி, சமூகசேவை முதலிய பல துறைகளிலும் அவர் இங்கு செய்துள்ள பணி கொஞ்சமன்று. ஏழு வருடங்ளுக்குமுன்பாக அவர், இலங்கையைவிட்டு ஆஸ்திரேலியாவுக்குச் சென்றபோது, அவருக்கே பிரிவு மிக வருத்தமாக இருந்தது. ஈழநாட்டுடன் அவர் வாழ்க்கை அவ்வளவு பிணைந்திருந்தது.

இரண்டுமாதங்களுக்கு முன் சீமைக்குச் செல்லும்வழியில் அவர் இங்கு வந்து நண்பர்களையும் பார்த்துவிட்டுச் சென்ருர்.

⁂ ⁂ ⁂

பிள்ளைகளைப் பிரம்பால் அடிப்பது அவருக்குச் சிறிதும் பிடிக்காது. ஒருசமயம் அவர், வாத்தியார்களிடமிருந்த பிரம்புகளையெல்லாம் வாங்கி, முற்றத்தில்வைத்து, அவற்றைத் தகனம் செய்து, சாம்பலை எடுத்துக்கொண்டு மாணவர்களுடன் தாமும் பள்ளிக்கூடமெல்லாம் ஊர்வலமாக வந்த ஒரு ருசிகரமான சம்பவத்தை நேரில் பார்த்த ஓர் அன்பர் தெரிவிக்கிருர்.

மாணவர்களின் அன்பையும் மரியாதையையும் அவர் பெரிதும் பெற்றிருந்தார். பிரம்படியை நிறுத்தியதால், கல்லூரியில் மாணவர் ஒழுங்கு அதிகரித்ததேயன்றி சற்றும் குறையவில்லையாம்.

⁂ ⁂ ⁂

"அடியாத மாடு படியாது, அடித்தால்தான் மாணவர்கள் ஒழுங்காகப் படிப்பார்கள்" என்று ஒரு தவருன கருத்துண்டு. இதனல் பள்ளிக்கூடமென்ருலே பல மாணவர்களுக்கு வேப்பங்காயாகிறது.

முன்காலத்தில் கோதண்டம், கால்விலங்கு முதலிய கொடுமைகளெல்லாம் செய்ததுண்டு. வாத்தியாரிடம் தினசரி அடிவாங்கி மாணவனெருவன், "நெடுமால் திருமருகா, நித்தநித்தம் இந்தெளவா. வாத்தியார் சாகாரா, என் வயிற்றெரிச்சல் தீராதா?" என்று முருகனிடம் சென்று பாடி வரம்கேட்டதாக நாடோடியாகச் சொல்லுவதுண்டு. வாத்தியாரின் பிரம்புதான், சிறுவரின் உள்ளத்தை இப்படி கசப்பாக்கியுள்ளது.

விஷமக்கார மாணவர் சிலர் இருப்பதும் உண்மை. அவர்கள் மிகமோசமானல் இரண்டொருமுறை எச்சரிக்கை செய்துவிட்டு பிறகும் திருந்தாவிடில் பள்ளிக்கூடத்தைவிட்டு வெளியேற்றிவிடலாம். பிரம்பால் அடிக்கும் காட்டுமிராண்டி வழக்கம் ஒழிந்து, மாணவர்களை வசீகரிக்கும்படியான ஏற்பாடுகளையே செய்ய வேண்டும்.

ஈழநாட்டில், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும், இனி மாணவர்களைப் பிரம்பால் அடிக்கும் பழக்கத்தை ஆசிரியர்கள் விட்டுவிட வேண்டுமென்று வண. பிதா லாங் அவர்கள் பெயரால் வேண்டுகிறேன்.

# இவ்வாரம் கொழும்புவரும்

## செக் தூதுகோஷ்டி

### 4 மாதம் இலங்கையில்

### சுற்றுப்பிரயாணம் செய்யும்

கொழும்பு, வெள்ளி

செக்கோஸ்லோகிவேயாவின் சுற்றுப்பிரயாண தூதுகோஷ்டி ஒன்று இவ்வாரத்தில் இலங்கைக்கு விஜயம்செய்ய விருக்கிறது.

சிநேகபான்மையை வளர்ப்பது, சமாதான வளர்ச்சியை ஸ்திரப்படுத்துவது, பலதேசத்து மக்களுச்கிடையிலும் சகவாழ்வுக்கு வித்திடுவது போன்றவைகளை உருவாக்குவதற்காகவே இந்த செக்கோஸ்லோகேவயா தூதுகோஷ்டி நாட்டுக்குநாடு விஜயம்செய்து கொண்டிருக்கிறது.

மிரெஸ்லாவ், டாக்டர் ரோபர்ட் விற், திரு. மிரெஸ்லாவ் ட்ரையாக் ஆகியவர்கள் இத்தூதுகோஷ்டியில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

சுமார் நான்குமாத காலம் வரை இலங்கையில் தங்கியிருக்க விரும்பும் இத்தூதுகோஷ்டி இங்குள்ள கலாசார சரித்திர சம்பந்தமான இடங்களுக்கு விஜயம்செய்து தகவல் படங்களை தயார்செய்யும். அரசியல், பொருளாதார, கலாசாரம் போன்றவைகளுடன் சம்பந்தமானவர்களுடன் தூதுகோஷ்டியினர் உரையாடி நிலைமையை அறிந்துகொள்ளர். இலங்கை மக்களின் வாழ்க்கையைப்பற்றித் தாம் அறிந்தவைகளை ஆதாரமாகக்கொண்டு புத்தகங்களையும் வெளியிடுவர்.

#### உண்டு, உறங்க வசதியான 'வான்'

ஆண்டுக்கணக்காக ஊர் சுற்றிக்கொண்டிருக்கும் இந்த் தூதுகோஷ்டியினர் தமது "வாசஸ்தலமாக" இரண்டு பெரிய "வான்"களைப் பாவித்து வருகிறார்கள். ரற்ரு என்ற மோட்டார் கொம்பனி ஒன்றினால் பிரத்தியேகமாகச்செய்யப்பட்ட இந்த இரண்டு "வான்"களும் தூதுகோஷ்டியினரின் 'வாசஸ்தல'மாகவே விளங்குகிறது. படுக்கை அறை சாப்பாட்டு அறை, சமையல் அறை, படங்களை உருவாக்கும் பகுதி, மின்சாரப்பகுதி ஆகியவைகள் எல்லாம் ஒருங்கே 'அமைந்திருக்கிறதென்றால் எப்படி?

#### விஜயம்செய்யும் நாடுகள்

எந்த நாடுகளுக்கு விஜயம் செய்யவிருக்கிறார்களோ அந்த நாடுகள் சம்பந்தமான சகல தகவல்களையும் தூதுகோஷ்டியினர் ஏற்கனவே படித்து அறிந்துகொண்டனர். சுமார் ஐந்து வருடம்வரை இவர்களுடைய சுற்றுப்பிரயாணம் நீடித்துக்கொண்டே யிருக்கும். ஒன்றரை லட்சம் புகைப்படங்களை தயாரிக்கவும் ஏற்பாடாகியிருக்கிறது.

நியூ கினி, பசுபிக் பிராந்திய தீவுகள், செஞ்சீனு, கொரியா' ஜப்பான், மங்கோலியா, ரஷயா, போலந்து, ஜேர்மனி ஜனநாயகக் குடியரசுபோன்றவைகள் மேற்படி தூதுகோஷ்டியினர் விஜயம் செய்யவிருக்கும் நாடுகளில் சில.

## தமிழ்நாடு மின்சாரமயமாகும்

3ம் ஐந்தாண்டுத் திட்டத்தில் தமிழ்நாட்டிலுள்ள 300 நகரங்களிலும், 20,000 கிராமங்களிலும் பூரண மின்சார உபயோகம் அமுலுக்குக்கொண்டுவரப் படும்.




பற்றறிகள்

சார்ச் செய்தும்
பழுது பார்த்தும்
உத்தரவாதத்துடன்
கொடுக்கப்படும்

முருகன் எலக்ரிக்ஸ் ஸ்ரோர்ஸ்

6/8, ஸ்ரான்லி விதி, யாழ்ப்பாணம்.


## ஆணையாளர் யார் ?

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முடிவில்தான் புதிய இடத்துக்குப் பதவியேற்கச் செல்வதாகவும் யாழ்ப்பாண மாநகரசபை ஆணையாளர் திரு. சின்னையா பதவியேற்க வந்த திரு. சண்முகத்திடம் தெரிவித்தார்.

இதுபற்றி திரு. சண்முகம் மேலிடத்துக்குத் தெரிவித்தார். திரு. சண்முகம் காலிநகரசபைக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாக மேலிடத்திலிருந்து அறிவிக்கப்பட்டது. ஆனல் இம்மாதம் 15-ந்திகதியிலிருந்துதான் காலிநகரசபையில் பதவி யேற்கும்படி அந்த அறிவித்தல் கூறியது. திரு. சின்னையாவின் இடமாற்றம் ரத்துச்செய்யப் பட்டது.

மே மாதம் 15ந் திகதி காலி மாநகரசபையில் பதவியேற்கும் படி அறிவிக்கப்பட்டிருந்ததால் 15ந் திகதிவரை யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளர் தானேதான் என்று மாநகர சபையின் அலுவல்களை திரு. சண்முகம்கவனிக்கத்தொடங்கி விட்டார்.

ஆனல் திரு. சின்னையா தானேதான் யாழ்ப்பாண மாநகரசபையின் ஆணையாளரென்றும் திரு.சண்முகத்துக்கு மே மாதம் 15ந் திகதிவரை விசேஷ லீவு கொடுக்கப்பட்டுள்ளதென்றும் தெரிவிக்கிறார்.

இந்த இடமாற்றப் பிரச்சினை சம்பந்தமாக வியாழக்கிழமை கொழும்பிலிருந்து ஒரு தந்தி கிடைத்ததைத் தொடர்ந்து திரு. சண்முகம் கொழும்புக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார். ஆணையாளர் காரியாலயத்தின் கதவைப் பூட்டிச் சாவியையும் அவர் எடுத்துச் சென்றுவிட்டார்.

சபையின் கணக்குமதிப்பீட்டுக் காரியாலயத்தில் திரு. சின்னையா உட்கார்ந்து ஆணையாளரின் கடமைகளைக் கவனித்து வருகிறார்.

#### மந்திரி வந்து பார்த்தார்

இதற்கிடையில் ஸ்தலஸ்தாபன, வீடமைப்பு மந்திரி திரு. மகாநாமசமரவீர நேற்று யாழ்ப்பாணத்துக்கு வந்து மாநகர சபைக்கும் சென்று நிலைமையைக் கவனித்துக்கொண்டு கொழும்புக்குத் திரும்பினர்.

## எதிரிக்கு 6வருடச் சிறை

### மறவன் புலம் கொலை வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், சனி

சாவகச்சேரிப் பகுதியில் மறவன் புலம் என்ற இடத்தில் கந்தன் சின்னவன் என்பவரை 1960-ம் ஆண்டு ஜூலை மாதம் 11-ந் திகதி உலக்கையால் தாக்கிக் கொலை செய்ததாக நாகமணி கணபதி என்பவர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு வடமாகாண அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் என். சின்னத்தம்பி முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

விசாரணையின் போது கைமோசக் கொலைபுரிந்ததாக எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

எதிரி நாகமணி கணபதிக்கு 6வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்து நீதியரசர் தீர்ப்பளித்தார்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசா வழக்கு விசாரணையை ஆரம்பித்து வைத்தார். திரு. வி. கனகசபையின் அனுசரணையுடன் திரு. எஸ். சுந்தரலிங்கமும் திரு டி. கணேசலிங்கமும் எதிரியின் சார்பில் ஆஜரானர்கள்.

## எதிரிகளுக்கு விளக்க மறியல்

### நவாலி தெற்கு கொலை வழக்கு

யாழ்ப்பாணம், சனி

நவாலி தெற்கைச் சேர்ந்த நவரத்தினம் அரியபுத்திரன் என்பவரை 1961-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 26-ந் திகதி மொங்காலை அடித்துக் கொலை செய்ததாக அதே இடத்தைச் சேர்ந்த அம்பலவாணர் நவரத்தினம், நவரத்தினம் திருஞான சம்பந்தர் ஆகியோர்மீது குற்றம் சாட்டி ஆனைக்கோட்டை பொலிசைச் சேர்ந்த உதவி இன்ஸ்பெக்டர் ரி. கந்தையா தொடர்ந்த வழக்கில் யாழ்ப்பாணம் நீதவான் திரு. அரசுவால்டன் வாக்குமூலம் பதிவு செய்தார்.

திரு. வி. நடராஜாவுடன் திரு. எஸ். வி. கதிரவேலு எதிரிகளின் சார்பில் ஆஜரானர்.

பிரேத பரிசோதனை நடத்திய பதில் சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் ஏ. அருமைநாயகம் சாட்சியமளிக்கையில் காலஞ் சென்றவரின் உடலில் 12 காயங்களிருக்கக் காணப்பட்டனவென்றும் இக்காயங்கள் மழுங்கிய ஆயுதத்தால் ஏற்பட்டிருக்கலாமென்றும் கூறினர்.

எதிரிகளை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்ட நீதவான் விசாரணையை ஒத்திவைத்தார்.

## கடையில் களவு

அல்லைப்பிட்டி, வியாழன்.

அல்லைப்பிட்டியில் உள்ள "லட்சுமி ஸ்டோர்ஸ்" என்னும் கடையில் ஏராளமான சிகரெட் பாக்கெட்களும், பணமும் களவாடப் பட்டதாகத் தெரிகிறது சந்தேகத்தின் பேரில் மூத்த தம்பி, குமாரசாமி ஆகிய இருவரும் ஊர்காவற்றுறைப் பொலிசாரால் கைது செய்யப் பட்டுள்ளனர்.

## ரூ. 10,000 பிணையில் 10 பேர்!

பதுளை, மே 5

மகாடோவ தோட்டக் கூட்டுறவுப் பண்டசாலையின் காவலாளி திரு. வி. கதிரவேலுவைக் கொலை செய்த குற்றத்திற்காக தொடரப்பட்ட வழக்கில், சந்தேகத்தின்பேரில் 10 பேர் கைது செய்யப்பட்டு, ஒவ்வொருவரும் ரூ. 10,000 பிணையில் விடுபட்டுள்ளனர்.

## வண. பிதா லோங் காலமானர்

யாழ்ப்பாணம், மே 6

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரியின் முன்னுள் அதிபரான வணக்கத்துக்குரிய பிதா. டி. எம். எப். லோங் சென்ற ஏப்ரல் மாதம் 29-ம் திகதி லண்டன் மாநகரில் காலமானர்.

கல்வித்துறையில் அனுபவம் மிக்க பிதா லோங் சென். பற்றிக்ஸ் கல்லூரி அதிபராக 20 வருடங்கள் சேவை புரிந்தவர்.

இவரின் ஆத்ம சாந்திக்கான பிரார்த்தனை இன்று காலை 6-30 க்கு யாழ்ப்பாணம் சென். மொரிஸ் தேவாலயத்தில் நடைபெறும்.

#### கல்லூரி மூடப்பட்டது

யாழ்ப்பாணம் மே 5

சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபராய் இருந்து, லண்டனில் காலமான வண. பிதா டி. எம். எப். லோங்குக்கு அனுதாபம் தெரிவிக்குமுகமாக இன்று, இக் கல்லூரி மூடப்பட்டது. ஆசிரியர்களும், மாணவர்களும் அனுதாபக் கூட்டம் நடத்தினர். சனிக்கிழமை காலை 6-30க்கு அவரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை நடைபெறும்.

## பண்டாரநாயக்கா கொலைவழக்கின் இறுதிக்கட்டம்

கொழும்பு, வெள்ளி

பண்டாரநாயக்கா கொலை வழக்கு, விசாரணையின் இறுதிக்கட்டத்தை அடைந்திருக்றது. நீதிபதி திரு. டி. எஸ். பெர்னண்டோ, இறுதியாகத் தமது தொகுப்புரையை ஜூரர்களுக்கு இன்று வாசித்தார்.

## கூட்டுறவு சமாஜ கல் நாட்டு விழா

மட்டக்களப்பு, மே 5

மட்டக்களப்பு பட்டினக் கூட்டுறவு சமாஜம் ரூ. 1,33,000 செலவில் கட்டத் தீர்மானித்திருக்கும் புதிய கட்டடத் திற்குரிய அஸ்திவாரக் கல் நாட்டு விழா அண்மையில் சைவ முறைப்படி நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்துகொண்ட சமாஜத் தலைவர் திரு கே. டபிள்யு. தெய்வநாயகம், மட்டக்களப்பு உதவிக் கூட்டுறவு அபிவிருத்தி அதிகாரி திரு. கே. எஸ். பொன்னுத்துரை ஆகியோர் அடிக்கல்லை நாட்டினர்கள்.

## சோம்பேறிகளைத் திருத்த ரஷ்யாவின் புதிய திட்டம்

மாஸ்கோ, மே 5

ரஷ்யாவில் சோம்பேறிகளாகத் திரிபவர்களைத் திருத்துவதற்கான குடியேற்றத் திட்டமொன்றை அங்கு ஆரம்பித்துள்ளார்கள்.

உழைப்பவருக்கே உலகம் என்ற கொள்கையின் அடிப்படையில் உருவாக்கப் பெற்ற இத்திட்டத்தால் அங்கு இனி எவரும் சோம்பேறியாகத் திரிய முடியாது என அவர்கள் நம்புகின்றார்கள்.

## அகண்டநாம பஜனை

நாவலப்பிட்டி, புதன்

சித்திரா பூரணைத் தினத்தை முன்னிட்டு தொளஸ்பாகையிலுள்ள தாமரவல்லி ஸ்ரீ சுப்பிரமணியசுவாமி கோவிலில் அகண்டநாம பஜனை நடைபெற்றது. அன்று நடைபெற்ற கூட்டத்துக்கு ஆசிரியர் திரு. நா. முத்தையா தலைமை வகித்துப் பேசியதாவது:-

"தோட்டப் பகுதியில் முதன் முதலாக நடைபெற்ற அகண்ட நாம பஜனை இது. தொழிலாளர் சமய வாழ்வில் ஈடுபட இத்தகைய நாம பஜனைகள் அடிக்கடி நடத்த முன்வர வேண்டும்". ஸ்ரீமதி பொன்னம்மாள் கிருஷ்ணபிள்ளையும் பேசினர்.


மோனரு அன் ரோஸ் பப்படங்கள்

நாவிற்கு ருசியுடன் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு
தனிஉளுந்தில் சுகாதார முறைப்படி தயார் செய்யப்படுவது

MONARA PAPPADAM — TRADE MARK

மோனரு
அன்
ரோஸ்
பப்படங்கள்
மூவர்ண கலர்
லேபிளுடன்
மயில் – ரோஸ்
அடையாள மிட்டு

ROSE FLOWER BRAND BEST PAPPADAM — REGD. TRADE MARK No 18255 — A. M. BUHARI, 255, 5th CROSS ST., COLOMBO.

இலங்கையில் எல்லா இடங்களிலும் விற்பனையாகிறது.

தயாரிப்பவர்கள்:

ஏ. எம். புகாரி அன் கோ

99, நாலாம் குறுக்குத் தெரு,
கொழும்பு.

# தாகூர் காணும் இந்திய இதயம்

**ரவீந்திரநாத் தாகூர் மேனுடுகளுக்கும் கீழைத் தேசங்களுக்கும் சென்று இந்தியாவின் பழம் பெருமைகளை எல்லாம் மக்களுக்கு நினைவூட்டி வைத்தார். "பாரதமாதாவின் பழமையிலிருந்து தோன்றியுள்ள தூதன் நான்" என்று ஒரு சமயம் தாகூர் தமது உரையிற் குறிப்பிட்டிருந்தார். 1929இல் அவர் வெளிநாடு சென்ற போது ஆங்கிலத்தில் நிகழ்த்திய அவ்வுரையின் தமிழாக்கம் இது.**

பல நூற்றாண்டுகளுக்கு அப்பால் சில உண்மைகளை என்னுல் பார்க்க முடியும். பண்டைய காலக் கனவு எனது உள்ளத்தில் மீண்டும் உதிக்கின்றது. இந்த நாட்டிலும் அது தனது ரேகையைப் பதித்துச் சென்றிருக்கின்றது. அதே கனவு எனது இரத்தத்தில் இன்றும் ஓடிக்கொண்டிருக்கிறது. ஒரு சந்திப்பு முன்னர் நிகழ்ந்ததை உங்கள் உள்ளத்தில் நினைவுறுத்த நான் முன் வருகின்றேன். இந்த நாடு அதே சந்திப்பிற்தான் விழிப்புற்று, கலை எழுச்சியிலும், சிந்தனைச் செல்வத்திலும் மறுமலர்ச்சி எய்தியது! எம்மால் இன்று அறிந்து கொள்ள முடியாத, மறைந்து போன ஏடுகளில், பழைய யுகம் அப்படியே மௌனமடைந்திருக்கிறது. காலவெள்ளத்திற் சுழன்றோடி மறைந்து கிடக்கும் மாணிக்கமே அது. இரத்தினத்தை இழந்த பின் வெளியே கிடக்கும் வெறும் பெட்டிபோல், அது இப்போது காட்சி தருகின்றது.

அழிந்துபோன நிலையிலும் அதன் சிறப்பு ஒழிந்துபோகவில்லை. இந்தியாவின் இதயம் இதே வானத்தின் கீழ் சூரிய ஒளியில் முன்னமே துடித்துக் கொண்டு தான் இருந்திருக்கிறது. அழகில் கலைக்கனவு கண்டு, தன் செல்வக் கருத்துக்களை எங்கும் வாரி வழங்கி அதன் பயனுக வந்திருக்கும் விளைவுகளைக் கண்ணுற ஆவல் கொண்டே நிற்கிறது. நாகரிகப் பண்பாட்டிலும், தக்க முறையில் வளர்ந்து செயலாற்றியிருக்கும் இந்தியா, என் வாயிலாகத் தனது பழம் பெரும் நாடாகிய இப்பகுதிகளுக்கு மீண்டும் வந்திருக்கிறது. பாரத மாதாவின் பழமையிலிருந்து தோன்றியுள்ள தூதன் நான். உங்கள் கதவண்டை நின்று கொண்டு, என்னை அடையாளம் தெரிந்து வரவேற்று, தங்கள் இதயத்திலும் எனக்கு இடம் அளிக்குமாறு கேட்கின்றேன்.

உண்மையாகவே கூறுகின்றேன், பழைய வரலாறு இன்று மங்கி மறைந்துவிட்டது. மனிதனின் ஒருமைப்பாட்டைக் கொண்டாட முதன் முதலாக ஏற்றிய அந்தத் தீபம் அணைந்து விட்டது! அன்பர்களே! பழைய தலைமுறைகளில், இதே வானத்தின் கீழ், மணம் கமழும் மரத்தின் நிழலடியில், வசந்தத்தை வரவேற்றும், மயனை நட்சத்திரப் பொலிவின் கீழ் காதலைபபற்றிக் கீதம் இசைத்தும், தங்க ஒளி பரப்பி வரும் அருணேதயத்தைப் பற்றிப் பாடியும், மாலையில் மேற்கு கடலில் மூழ்கி மறையும் அஸ்தமனத்தைப்பற்றிப் பாடியும் சென்ற உண்மைக் கவிஞர் கூட்டத்தைச் சேர்ந்தவனே, நான். பண்டைய காலத்தில், எனது முன்னேர் உங்கள் மத்தியில் எப்படி இன்ப துன்பங்களைப் பாட்டில் இசைத்து அனுவித்தார்களோ, அதே போலவே எனது இதயத்திலும் இன்று இன்பதுன்பநிகழ்ச்சிகள் இசைபாடிக்கொண்டேயிருக்கின்றன. நீங்கள் இதையும் நன்கு அறியவேண்டும். ஒளி, காதல், சுதந்திரம், இவைபற்றிய உயர்ந்த மனித ஆர்வங்களையும் இலட்சியங்களையும் காப்பாற்றவே எனது கீதங்கள் எழுந்து ஒலிக்கின்றன.

மிகக் கேவலமான முறையில் நிகழும் கொடுமையையும் சுயநலத்தையும் ஒழிக்க முயலும் உத்தமத்தியாகியின் தெய்வத் தொண்டின் வெற்றியையே நான் பாடுகின்றேன். இந்த நாட்டிலே, முன்னர் அறிவுச் செல்வத்தை வாரி வழங்கிய ஒளி நிறைந்த புகழ்பெற்ற இந்திய நாட்டிலிருந்தே நான் வாழ்த்துச் செய்திகளை உங்களுக்குக் கொண்டு வந்திருக்கின்றேன். இன்றைய இந்தியாவிலிருந்து, உங்களுக்கு அவளின் ஆழ்ந்த அனுதாபத்தையும் நட்புறவையும் கொண்டு வந்துள்ளேன். இந்நாட்டுக்கும் இந்தியாவுக்குமுள்ள தொடர்பை, பூகோள அமைப்பால் வெட்டி விட முடியாது. உங்களுக்கும் இந்தியாவுக்கும்உள்ள கல்வி, கலை முதலிய தொடர்புகளை எவராலும் வெட்டி எறிந்துவிட முடியாது.

# குருதேவர் வாக்கு

### கடவுள்

கடவுளின் நிழலையும் சொல்லையும் மீறி, எவனும் தப்பித்துக் கொள்ள முடியாது. கடவுள் எங்கும் வியாபித்து, நம்முடைய சிறு செயலிலும் நம்மைப் பின்பற்றித் தொடர்ந்து வருகிறுர். நாம் அம்மகாஜோதியினின்றும் கிளைத்த சிறு சுடர்கள். கடவுளை மறுக்கவோ, மறக்கவோ நம்மால் இயலாது.

### தொண்டன்

அரசியலில் ஈடுபட்டுக் கோஷங்களைக் கிளப்பி பெயர் எடுப்பவனே, மேடைப் பிரசங்கம் செய்து விட்டு மனம் போனவாறு திரிபவனே, உத்தியோக வேட்டையில் ஈடுபட்டு வாழ்பவனே தொண்டனுக மாட்டான். உண்மையிலேயே எங்கோ பெயர் தெரியாமல் ஏழை மக்களின் நலனுக்குத் தன் மன மொழி மெய்களால் உழைப்பவனே தொண்டன்.

### புதுமை

நாளுக்கு நாள் புதுப்புது சிருஷ்டிகளால் தன்னுடைய வளர்ச்சியைக் காட்டுவதே மனிதனின் இயற்கை பழைய வழக்கங்கள் என்று, சிறைச்சாலையிலே அவன் எந்நாளும் உழன்று கொண்டிருக்க முடியாது.

### தானே நாயகன்

தனக்குத் தானே நாயகன் ஆக இருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரிது. ஆனால் இந்த நாட்டிலே இவ்வுரிமை நால் வசனங்களாலும்

(7-ம் பக்கம் பார்க்க)

# சாந்திநிகேதன் நினைவுகள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

வில் நான் வீணையில்லாது போனல் "மகேஸ்வரி நீர் ஏன் உமது வீணையைக் கொண்டு வரவில்லை" என்று கேட்பார். அவர் என்னையும் சாவித்திரி என்ற இன்னுமொரு அடையாறிலிருந்து வந்த பெண்ணையும், மாலைவேளையில் நேரமிருக்கும் போது வந்தால் தாம் தமது பாட்டுக்களைச் சொல்லித்தருவதாகக் கூறினர். நாங்களும் கிடைத்த தருணத்தை நழுவவிடாது குருதேவரிடம் சென்று சில கீதங்களைக் கற்றுக்கொண்டோம்.

### இராஜப் பிரதிநிதி விஜயம்

ஒரு சமயம் நவம்பரில் ஏர்வின்பிரபு (அப்போதைய வைஸ்ரோய்) அங்கு விஜயம் செய்வதாகவும் அவரைச் சிறப்பாக வரவேற்க வேண்டுமெனவும் விரும்பி குருதேவர் சகல ஒழுங்குகளையும் திருநந்தலால் போஸிடம் ஒப்படைத்தார். அத்துடன் தனது ஆச்சிரமத்தில் எல்லாவகையிலும் சிறந்த மாணவி என்ற முறையில் என்னையே இராஜப் பிரதிநிதிக்கு முன்னிலையில் வீணை வாசிப்பதற்கும் அறிமுகப்படுத்துவதற்குமாக ஒழுங்கு செய்யப்பட்டது' அறிமுகம குருதேவரால் செய்யப்பட்டதும் ஏர்வின்பிரபு அவர்கள் தமது இடது கையை நீட்டிக் குலுக்கினர். எனக்கு அது ஆச்சரியமாகவே இருந்தது. பின்னரே அவர் வலது கரத்தை, சென்ற மகாயுத்தத்தில இழந்துவிட்டதாக அறிந்தேன். அதற்குப்பதிலாக ஒரு செயற்கைக் கை இணைத்திருந்தார்.

ஸ்ரீ நந்தலால் போஸ் அடக்கமான ஒரு பொக்கிஷம். அவரைப் பார்த்துக் கொண்டிருந்தால் அறிவு விருத்தியாகும். அமைதியும் அடக்கமும் கருணையும் ஒருங்கே அமையப்பெற்ற ஒரு சிலர். அவர் அன்பாகவும் அக்கறையுடனும் தனது கடமையை மாணவருக்குச் செய்வார். அவரை நாங்கள் 'மாஸ்டர் மகஷாய்' என்றே அழைப்போம். அவர் சித்திரம் வரைவதை மட்டுமின்றி நல்ல அறிவுரைகளையும் போதிப்பார். அவர் இன்றும் அங்கு இருப்பது பெறற்கரிய ஒரு பேருகும்.

### மறக்க முடியாது

எங்களுக்குக் குருதேவரின் பாடல்களைப் பற்றிய திருபாபு என்னும் தீ நேந்திரநாததாகூரான குருதேவரின் பெருமகனை என்னல் மறக்க முடியாது. நான் யாழ்ப்பாணம் திரும்பிய பின்னரும் என்னுடன் தொடர்புவைத்திருந்த பெரும் மகன் அவர்.

எனது சாந்திநிகேதன் வாழ்க்கைக்குப் பெருந்துணையாக இருந்த எனது அருமை அண்ணை 'அரியம் தா' அவர்களை (ஈ.டபிள்யூ. அரியநாயகம்) ஒருபோதும் மறக்க முடியாது

நான் சாந்திநிகேதனை விட்டு வரும் பொழுது, குருதேவ் பின்வரும் அருள் மொழிகளால் என்னை ஆசீர் வதித்து அனுப்பினர்.

Take my word into your Vina
Giving it a new birth in the
Paradise of Music.

11th Feb. 1929.

முதலில் வங்காளியில் எழுதிய பின்னர் ஆங்கிலத்தில் எழுதினர்.

இவ்வாக்கியங்களை எனது ஏட்டில் குருதேவர் தமது கைப்பட எழுதியிருக்கின்றர்.

### குருதேவர் இலங்கை விஜயம்

நான் குருதேவர் அவர்களையும் ஸ்ரீநந்தலால் போஸ் அவர்களையும் 1934-ம் ஆண்டு மறுபடியும் தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். குருதேவர் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கிருரெனப் பத்திரிகைகள் மூலம் அறிந்தேன். உடனே அவரை யாழ்ப்பாணமும் வரும்படி அன்புடனும் வணக்கத்துடனும் எழுதிக் கேட்டேன். எனது வேண்டுகோளை ஏற்ருர். கொழும்பிலுள்ள வரவேற்புச் சபையாருக்கும் இதை அறிவித்தார். உடனே எனது தந்தையார் காலஞ்சென்ற திரு. தா. பொ. மாசிலாமணிப்பிள்ளை அவர்கள் கொழும்புக்குச் சென்று வரவேற்புச் சபையினரைச் சந்தித்து குருதேவர் யாழ்ப்பாணம் வருவதற்கு வேண்டிய ஒழுங்குகளைச்செய்தார். எனது கணவனுர் திரு. க. நவரத்தினம் அவர்களும் நானுமாக ஒரு பொதுக் கூட்டத்தைக் கூட்டி வரவேற்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்தோம். வரவேற்புச் சபைக்கு காலஞ்சென்ற அறிஞர் வண. டாக்டர் ஐசக் தம்பையா அவர்கள் தலைவராகவும், நியாயவாதி திரு. எஸ்.ஆர். கனகநாயகமும், திரு. க. நவரத்தினமும் செயலாளர்களாகவும் கடமையாற்றினர்கள். குருதேவருக்கும் அவரது குழுவினர்க்கும் சிறந்த வரவேற்பு யாழ்ப்பாணத்தில் அளிக்கப்பட்டது. 4400 ரூபாய் கொண்ட ஒரு பணமுடிப்பும் சாந்தி நிகேதன் கட்டட நிதிக்காக அளிக்கப்பட்டது. குருதேவர் ஒரு வாரம் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தார். ஸ்ரீ நந்தலால் போஸ் அவர்களுக்கும் குருதேவரைத் தவிர்ந்த ஏனையோருக்கும் அன்பான ஒரு விருந்தை எங்கள் இல்லத்தில் நாங்கள் அளிக்கக் கூடிய பேறும் எங்களுக்குக் கிடைத்தது.

யாழ்ப்பாணத்தை விட்டுச் செல்லும்பொழுது குருதேவர் தமது படத்தில் கையொப்பமிட்டு எங்களுக்கு அன்பளிப்பாகத் தந்து என்னை ஆசீர் வதித்தார். ஸ்ரீநந்தலால் போஸ் அவர்களும் ஒரு ஓவியத்தை வரைந்து அதில் தமது கையொப்பத்தையும் இட்டு ஆசீர்வதித்துத் தந்தார். அவைகளிரண்டும் இன்னும் எங்கள் இல்லத்தில் புனித பொருள்களாக விளங்கி உயர்ந்த நினைவுகளைத் தந்துகொண்டிருக்கின்றன.

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

## நாகர்களுக்கு தனி மலைராஜ்யம் இல்லை

### நிதிமந்திரி அறிவிப்பு

பம்பாய், மே 4

"அஸாம் மலைப்பகுதிகள் ஐந்தையும் கொண்ட தனி ராஜ்யம் அமைக்கும் எண்ணம் மத்திய அரசாங்கத்துக்கு இல்லை" என்று இந்திய நிதி மந்திரி திரு. மொரார்ஜி தேசாய் நாகாலந்துக்குச் சென்று திரும்பிய பின் தெரிவித்தார்

நாக மக்கள் தமக்குத் தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் சேர்ந்து அளித்த வரவேற்பிலும் சம்பாஷணைகளிலும் பகை நாகர்களின் நடத்தையைக் கண்டித்தார்களென்று நிதிமந்திரி தேசாய் கூறினர்.

நாகர்கள் தனிமலை ராஜ்யம் அமைக்க வேண்டுமென்று கோருவதற்கு அஸாம் மக்கள் மொழியை அடிப்படையாக வைத்து நாகர்கள்மீது ஆதிக்கம் செலுத்த முனைவார்களோ வென்ற அச்சம்தான் காரணம் என்று திரு. மொரார்ஜி தேசாய் கூறினர்.

## மாணவர்களுக்கு தொழிற் கல்வி அவசியம்

காத்தான்குடி மே 5.

"மாணவர்களுக்கு கல்வி போதிப்பது மட்டுமின்றி கிராமங்களின் முன்னேற்றமும் ஆசிரியர்கள் கையில்தான் உண்டு. நமது கிராமங்களுக்கு குடிசைத் தொழில்களை ஊக்குவிப்பதுடன் நாட்டின் பொருளாதார முயற்சியிலும் ஈடுபட வேண்டும். இதை நிறைவேற்ற செய்ய மாணவர்களுக்கு ஏட்டுக் கல்வியுடன் நின்றுவிடாமல் தொழிற் கல்வியையும் போதிக்க ஆசிரியர்கள் முன் வரவேண்டும். என்று காத்தான்குடி அரசினர் முஸ்லீம் பாடசாலையில் நடைபெற்ற ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தலைமை வகித்த பட்டிருப்பு வட்டார வித்தியாதரிசி ஜனப் ஏ. எம். சரிபுதீன் கூறினர். மேலும் பலரும் சொற்பொழிவாற்றினர்கள்.

## நஞ்சுண்டு உயிர் பிழைத்த பெண்

அல்லைப்பிட்டி வியாழன் பொலிடோல் என்ற நஞ்சுக் கிருமி நாசினியை சோற்றோடு கலந்து உண்டு, உயிர் பிழைதத அதிசயச் சம்பவம் ஒன்று அல்லைப்பிட்டியில் நிகழ்ந்தது.

22 வயதுடைய நல்லம்மா என்ற பெண் தனது கணவனுக்கும், தனக்கும் ஏற்பட்ட மனக் கசப்பால் நஞ்சு கலந்து சோற்றை உண்டாராம். சுயநினைவின்றிக் கிடந்த அப் பெண்ணை யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுமதித்தார்கள் இப்போ இப் பெண் குணமடைந்துள்ளார் எனத் தெரிகிறது.

அழகிய பெனியன்! கால்மேஸ்!!
"லேடன்" தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன!
பல தினுசுகள்! பல அளவுகள்!!
எங்கும் கிடைக்கும்.
Leyden L.I.L
இன்றைய தேவை: சுதேசிப் பொருள் ஆதரவு!
அதற்கு வழி "லேடன்" பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனுட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சிபது
"லேடன்" பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை
7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.